

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், செம்பிருப்பு கடைவீதி பகுதியில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்ட கழகச் செயலாளர், நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. , சட்டமன்ற உறுப்பினர் மு. பன்னீர்செல்வம், கிழக்கு சீர்காழி ஒன்றிய செயலாளர் பஞ்சுகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன், ஜி.என். ரவி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்து தேவேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பெருந்தலைவர் காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை

# ‘புதுமைப் பெண்’ - ‘தமிழ்ப் புதல்வன்’ - ‘நான் முதல்வன்’ - போன்ற திட்டங்கள் வழியே ‘திராவிட மாடல்’ அரசு நனவாக்கி வருகிறது!

## வலைதளப்பதிவில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, ஜூலை 17**

**பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நேற்று முன்விதினம் டுத்த வலைதளப்பதிவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “காமராஜர் கண்ட கல்விக் கனவுகளை, ‘புதுமைப் பெண்’ - ‘தமிழ்ப் புதல்வன்’ - ‘நான் முதல்வன்’ - போன்ற திட்டங்களின் வழியே ‘திராவிட மாடல்’ அரசு நனவாக்கி வருகிறது” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

கல்வி எனும் ஒளி, சமூகத்தில் மண்டிக்கிடந்த இருளை எப்படியெல்லாம் கிழித்தெறியும் என்பதை சாத்தியப் படுத்திக் காட்டிய கர்ம வீரர் காமராஜரின் பிறந்த நாள் இன்று!

எட்டாக்கனியாக இருந்த கல்வி, ஏழை எளிய பிள்ளைகள் எல்லோருக்கும் சென்று சேர பள்ளிகளைத் திறந்து, மதிய உணவிட்ட காமராஜரின் பிறந்த நாளை, “கல்வி வளர்ச்சி நாள்” என்று அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்!

காமராஜர் வாழ்ந்த தியாகராயர் நகர் இல்லத்தைப் புதுப்பிப்பதோடு, அவர் பெயரில் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தை திருச்சியில் அமைக்கிறார், நம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள்!

காமராஜர் கண்ட கல்விக்கனவுகளை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன் போன்ற திட்டங்களின் வழியே நனவாக்கி வருகிறது நம் திராவிடமாடல் அரசு!

பெருந்தலைவர் காமராஜர் ஆற்றிய பணிகள் தமிழ் மண்ணில் என்றும் நிலைத்திருக்கும் வழிகாட்டும்.

அவர் புகழ் ஓங்கட்டும்!

இவ்வாறு அப்பதிவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், ஆதனக்குறிச்சி அம்மன் திருமண மண்டபத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை துவக்கி வைத்து பயனாளிகளுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.ரெத்தினசாமி.கலந்துகொண்டார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.07.2025) கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி, திருவெறும்பூர் வட்டம், நவல்பட்டு பகுதியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்து கொண்டு, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர் அருள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருவெறும்பூர் - நவல்பட்டில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்!

*திருவெறும்பூர் 17-*

திருவெறும்பூர் அருகே உள்ள நவல்பட்டு தனியார் திருமண மண்டபத்தில் உங்களுடன் ஸ்டாலின் தான் திட்டத்தை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார்.

பொதுமக்களின் சிரமத்தை போக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் இன்று தமிழக முழுவதும் பத்தாயிரம் இடங்களில் நடத்துவதற்கு முடிவு செய்து நடத்தப்படுகிறது தமிழக முதல்வர் சிதம்பரத்தில் இந்த முகாமை தொடங்கி வைத்தார்.

அதன் ஒரு பகுதியாக திருவெறும்பூர் அருகே உள்ள நவல்பட்டு ஊராட்சி மற்றும் காந்தளூர் ஊராட்சிக்கு உட்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் நவல்பட்டு உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடந்த முகாமிற்கு திருச்சி கலெக்டர் சரவணன் தலைமை வைத்தார் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து செய்தியாளர்களை சந்தித்து கூறியதாவது.

புரட்சிகரமான இந்த திட்டம் நகராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் 13 துறைகளில் கொண்டு 46 வகையான சேவையில் வழங்கப்படுகிறது.

தற்பொழுது இங்கு நடைபெறும் இந்த நவல்பட்டு மற்றும் காந்தலூர் மக்களுக்காக நடத்தப்படுகிறது மற்ற ஊர்களை சேர்ந்த மக்கள் வந்திருந்தாலும் அவர்கள் ஏமாற்றம் அடைந்து விடக்கூடாது என்பதற்காக அவர்களது மனுவையும் பெற்று பதிவு செய்து கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது சிதம்பரத்தில் தமிழக முதல்வர் இந்த திட்டத்தை தொடங்கி வைக்கிறார் திருச்சி மாவட்டத்தில் இன்று நான்கு இடங்களில் இந்த திட்ட முகாம் நடைபெறுகிறது.

கடந்த நான்கு ஆண்டுகளில் திமுக அரசியல் திருச்சி மாவட்டத்தில் செய்த வளர்ச்சி திட்ட பணிகள்

ரூ.408 கோடி மதிப்பீட்டில், ‘முத்தமிழறிஞர் கலைஞர் ஒருங்கிணைந்த பேருந்து முனையம்,

ரூ128 கோடி மதிப்பீட்டில் 38 ஏக்கர் பரப்பளவில் ‘அண்ணா கனரக வாகன சரக்கு முனையம்

ரூ.236 கோடி மதிப்பீட்டில், 22 ஏக்கர் பரப்பளவில் ‘பெரியார் ஒருங்கிணைந்த காய்கறி அங்காடி’ அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு இருக்கிறது.

ரூ290 கோடி மதிப்பீட்டில், பெருந்தலைவர் காமராசர் பெயரில் மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம்.

ரூ18 கோடியே 9 இலட்சம் மதிப்பீட்டில் ‘பறவைகள் பூங்கா.

ரூ150 கோடி மதிப்பீட்டில் ‘சர்வதேச ஒலிம்பிக் அகாடமி.

ரூ3 கோடி மதிப்பீட்டில் ஜல்லிக்கட்டு அரங்கம்!

ரூ4 கோடியே 27 இலட்சம் மதிப்பீட்டில் பச்சமலை சுற்றுலா திட்டம்,

தொழில் புரட்சி ஏற்படுத்திட மணப்பாறையில், 1100 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தொடங்கப்பட்டிருக்கிறது. அதில் உலகின் முன்னணி நிறுவனங்களான ஜபில், பெப்சிகோ தொழில் துவங்க உள்ளார்கள். இதனால் 10,000க்கும் அதிகமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேலும், ரூ.400 கோடி மதிப்பிலான டைட்டில் பூங்கா அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டு அந்தப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இப்படி, கடந்த நான்கு ஆண்டுகளில், 26 ஆயிரத்து 66 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டங்கள் திருச்சிக்காக மட்டுமே நம்முடைய முதலமைச்சரால் தரப்பட்டிருக்கிறது.

மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் மாதம் 4 இலட்சத்து 42 ஆயிரத்து 124 பேர் பயன் அடைகிறார்கள்.

புதுமைப்பெண் மாணவிகள் 34 ஆயிரத்து 784 பேர் பயனடைகிறார்கள். தமிழ்ப்புதல்வன் திட்டத்தில் 16 ஆயிரத்து 955 பேர் மாணவர்கள் பயன்பெறுகிறார்கள்.

காலை உணவுத் திட்டத்தில் 86 ஆயிரம் பிள்ளைகள் பயன் அடைகிறார்கள்.

முதல்வரின் முகவரி திட்டத்தில், தீர்வு காணப்பட்டது 3 இலட்சம் மனுக்கள். அதாவது 3 இலட்சம் குடும்பங்கள்.

நான் முதல்வன் திட்டத்தில், 68 ஆயிரம் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

72 ஆயிரத்து 767 பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

5 ஆயிரத்து 843 விவசாயிகளுக்கு புதிய இலவச மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

70 ஆயிரத்து 360 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ4 ஆயிரத்து 160 கோடி கடனுதவிகள் வழங்கப்பட்டிருக்கிறது.

ரூ99 ஆயிரத்து 181 கர்ப்பிணி பெண்களுக்கு நிதியுதவி, கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் 4000 வீடுகள், 54 ஆயிரத்து 428 மாற்றுத்திறனாளி பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு இருக்கிறது.

மேலும், கடந்த மே 9ஆம் தேதி பஞ்சப்பூர் பேருந்து முனையத்தை திறந்து வைத்தப் பின்னர் ரூ527 கோடி ரூபாய் மதிப்பிலான, 3 ஆயிரத்து 597 பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ1,032 கோடி மதிப்பிலான 7 ஆயிரத்து 122 முடிவுற்ற பணிகளை முதலமைச்சர் தொடங்கி வைத்தார்.

இந்த முகாமில் வீட்டு மனை பட்டா கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கேட்டு அதிக விண்ணப்பங்கள் வரப்படுகிறது இதற்காக பொதுமக்களுக்கு கூடுதல் கவுண்டர்கள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கலெக்டர் கூறியுள்ளார் இதனால் மக்கள் அதிகம் பயன்பெறுவார்கள் என்றார்.

இந்த விழாவில் ஜி.ஆர்.டி.ஓ அருள் பிரகாசம், திருவெறும்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அண்ணாதுரை, திருவெறும்பூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கும்பக்குடி கங்காதரன், உட்பட அரசு அலுவலர்களும் கட்சி நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

# நாமக்கல் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. நலத்திட்ட உதவிகள் வழங்கினார்!

*நாமக்கல், ஜூலை. 17-*

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க .ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில், “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, மனுதாரர்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம் சின்ன முதலைப்பட்டி , பொட்டணம் பாச்சல் ஆகிய பகுதிகளில் ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் துவக்க விழா நடைபெற்றது. நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, தலைமை தாங்கினார். நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம், கு.பொன்னுசாமி மேயர் து.கலாநிதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், ,மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். ராஜேஸ்குமார் கலந்து கொண்டு ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமைத் தொடங்கி வைத்து, துறை சார்ந்த அரங்கில் மனுக்கள் பதிவு செய்வதைப் பார்வையிட்டு, பயனாளிகளுக்கு உடனடித் தீர்வாக அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டத்தினை கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் தொடங்கி வைத்துள்ளார். அதனடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் மக்களின் குறைகளை தீர்க்கும் வகையில், உங்களின் வீட்டிற்கே வந்து, கேட்டறிந்து தீர்வு காணும் “உங்களுடன் ஸ்டாலின்” என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**நாமக்கல் மாவட்டத்தில் 238 சிறப்பு முகாம்கள்!**

இத்திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் மொத்தம் 238 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது. இந்த முகாம்களில் நகர்ப்புறபகுதிகளில் 13 அரசுத் துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப் பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும். அத்துடன் முகாம்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் உடல் நலனைப் பேணும் வகையில் மருத்துவ சேவைகளை வழங்க மருத்துவ முகாம்களும் நடத்தப்படும்.

அதனடிப்படையில் நாமக்கல் மாநகராட்சி சின்னமுதலைப்பட்டியில் நடைபெறும் முகாமில், முகாம் தொடங்கிய 1 மணி நேரத்தில் ஏறத்தாழ 600க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளது. . கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, ஆய்விற்கு எடுத்து கொள்ளப்படும் என்றார். தொடர்ந்து

மனுக்கள் அளித்த பயனாளிகளுக்கு உடனடி தீர்வாக சாதி சான்றிதழ், வருமான சான்றிதழ், மருத்துவக் காப்பீட்டு அட்டை ஆகியவற்றினை வழங்கினார்.

இம்முகாமில், மாநகராட்சி ஆணையாளர் க.சிவக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) மா.க.சரவணன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.வடிவேல், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், உதவி ஆணையர் (தொழிலாளர் நல வாரியம்) இந்தியா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் நகராட்சிக்குட்பட்ட பாலகிளாவா ஜெயின் மண்டபத்தில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, முன்னிலையில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை நேற்று முன்தினம் (15.07.2025) பெற்றுக் கொண்டார். உடன் குன்னூர் நகர்மன்ற தலைவர் திருமதி சுசீலா, துணைத்தலைவர் வாசிம்ராஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நேற்று முன்தினம் (15.07.2025) தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெறும் இடங்களில் ஒன்றான சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் மண்டலத்தில் நடைபெற்ற முகாமில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாற்றுத்திறனாளி சனாவுல்லா இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வேண்டி கோரிக்கை மனு அளித்ததன் அடிப்படையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாற்றுத்திறனாளிக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.